# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இந்த வினாத்தாள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்திகள் மற்றும் போக்குகள் பற்றி அதிகமான கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் ஒட்டுமொத்த அம்சங்களையும் பரீட்சித்திருந்தது. இந்த வினாத்தாளை எதிர்கொள்ளும்போது தகவல் முறைமைகள் மீதான ஒழுக்கநெறி, சமூக மற்றும் சட்டச் சூழல் தாக்கங்கள் பற்றிய ஆழமான அறிவு முக்கியமானது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த வினாத்தாள் **A, B, C** என மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. சகல வினாக்களும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களாகும்.

### பகுதி A

**வினா இல. 01**

இது 25 புள்ளிகளுக்காக 15 நோக்கச் சோதனை வினாக்களைக் கொண்டிருந்தது. இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட 4 விடைகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானவையா அல்லது தவறானவையா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இவ்வினா ICT பாடத்திட்டத்தை முழுமையாகத் தழுவியவாறு தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கு பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் விடையளித்திருந்தனர். அவர்களின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. **1.8** இற்கு தவறான விடை அளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த வினாவில் நிறுவனமொன்றின் ஊழியர் ஒருவர் கணினி முறைமையை சட்டவிரோதமாக அணுகியது தொடர்பில் தரப்பட்ட சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான சட்டத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. எனினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையான 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றவியல் சட்டத்தை இனங்காணத் தவறியிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் தகவல் தொழில்நுட்பப் பிரயோகம் தொடர்பான குற்றங்களை உள்ளடக்குவதற்கு இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் பற்றிய எவ்வித யோசனைகளும் காணப்படவில்லை என்பதை அவர்கள் அளித்த விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது. இதன் விளைவாக அவர்கள் தவறான விடைகளையே தெரிவு செய்திருந்தனர்.

எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

**வினா இல. 02**

இவ்வினா **(a), (b), (c)** என 3 பகுதிகளைக் கொண்டது.

**பகுதி (a)** ஆனது தரமான தகவலின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. **பகுதி (b)** ஆனது கோவிட் 19 நோய்ப் பரவல் ஆரம்பித்தவுடன் தகவல் தொழினுட்பம் பயன்படுத்தப்பட்ட முறைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. **பகுதி (c)** ஆனது ''தகவல் முறைமை'' என்பதன் கருத்தை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாக்களுக்கு உண்மையிலேயே நன்றாக விடை அளித்திருந்த காரணத்தால் மிகவும் நல்ல புள்ளிகளைப் அவர்களால் பெற முடிந்திருந்தது. விசேடமாக, அதிகளவான பரீட்சார்த்திகளால் மிகச் சிறந்த புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தற்போதைய நோய்ப் பரவல் காலப்பகுதியை அனுபவித்த காரணத்தால் **பகுதி** (b) இற்கு நன்றாக விடையளித்து அதற்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 03**

இவ்வினா **(a), (b), (c), (d)** என 4 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** ஆனது நேரலையில் விரிவுரைகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பதிப்புகளைப் பின்பற்றுவதற்கு மாணவனுக்கு பயனுள்ளதாக இருக்கும் வண்ணம் திறன்பேசியில் நிறுவப்பட வேண்டிய செயலிகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களது பொது அறிவைப் பயன்படுத்தி இதற்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

**பகுதி (b)** ஆனது தேவையான இணைய இணைப்பைப் பெறுவதற்குச் சந்தா செலுத்தக்கூடிய சேவைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இந்தப் பகுதிக்கும் பரீட்சார்த்திகள் தங்களுடைய நடைமுறை அறிவைப் பயன்படுத்தி நன்றாக விடையளித்திருந்தனர்.

**பகுதி (c)** ஆனது, MS Word, MS Excel ஆகியவற்றை அவன் கற்க வேண்டுமாயின் பின்பற்ற வேண்டிய பாடங்களுக்குத் தேவையான மேலதிக சாதனங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. செய்முறை அனுபவங்களைப் பயன்படுத்தி, பெரும்பாலான பரீட்சார்த்திகள் மடிக்கணினி, மேசைக் கணினி, ஐ பேட் போன்றவற்றை விடைகளாக வழங்கி, இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (d)** ஆனது, தரப்பட்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. உண்மையில், எந்தவொரு கணினியின் மூலமும் அணுகிப் பயன்படுத்தக்கூடிய Google Drive அல்லது Dropbox போன்ற முகில் சேமிப்புக் கணக்கின் குழுவில் மாணவன் சேர்வானாயின், குறிப்புகளைச் சேமிப்பதற்கு USB அதிவிரைவு சேமிப்பான் ஒன்றை வாங்கத் தேவையில்லை என்ற நண்பனின் பரிந்துரையுடன் எவரும் உடன்படலாம். அதற்கிணங்க, அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்ததுடன் அவர்களால் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளையும் பெற முடிந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இவ்வினா **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** ஆனது, **Lak Tea** இற்குத் தேவையான தகவல் முறைமைகள் / தொகுதிகளின் 3 வகைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை. சில பரீட்சார்த்திகள் **Lak Tea** இற்குத் தேவையான தகவல் முறைமைகளின் வகைகளை அடையாளம் கண்டிருந்தனராயினும், அவர்களால் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு தகவல் முறைமைக்குமான தேவையை நியாயப்படுத்த முடியவில்லை. இதனால், அதிகளவான பரீட்சார்த்திகளால் வினாவின் இப்பகுதிக்குரிய முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**பகுதி (b)** ஆனது வணிகச் செயன்முறை வெளிமூலமிடலின் (BPO) 4 அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடையளித்து இதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இந்தப் பாடப் பரப்பு தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு போதுமான அளவிலும் தெளிவாகவும் இருப்பதாகத் தோன்றுகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 05**

இந்த வினாவானது **(a), (b)** என 2 பிரதான பகுதிகளையும் பகுதி **(a)** இன் கீழ் **(i), (ii)** என 2 உப பகுதிகளையும் கொண்டிருந்தது.

**பகுதி (a) (i)** ஆனது **திரு. அமரசிங்கத்திற்கு** கிடைக்கப்பெறும் கோரப்படாத மின்னஞ்சல்களின் எண்ணிக்கை தொடர்பில் **சமன்** என்பவரால் தெரிவிக்கப்பட்ட கூற்றான ''யாராவது அவருடைய மின்னஞ்சலை ஊடுருவியிருப்பதால்தான் அவ்வாறு கிடைக்கின்றது'' என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது பயனற்ற மின்னஞ்சல் (spam) சந்தர்ப்பமொன்றாக இருந்தபோதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் இதனை ஊடுருவல் சந்தர்ப்பம் ஒன்றாக இனங்கண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் அதிகளவானவர்களால் இப்பகுதிக்குப் புள்ளிகளைப் பெற முடியவில்லை. அவர்கள் ஊடுருவல் அல்லது பயனற்ற மின்னஞ்சல் ஆகியவற்றின் கருத்தைச் சரியாக அறிந்திருக்கவில்லை.

**பகுதி (a) (ii)** ஆனது கோரப்படாத மின்னஞ்சல்கள் கிடைப்பதைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய 2 சாத்தியமான நடவடிக்கைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இந்தப் பகுதிக்கும்கூட பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விளக்கமின்றி விடையளித்திருந்தனர். எனவே, இப்பகுதிக்கும் அவர்கள் புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. இந்தப் பகுதிக்குச் சில பரீட்சார்த்திகள் வலிமையான கடவுச் சொல்லைப் பயன்படுத்துதல், புதிய மின்னஞ்சல் கணக்கை ஆரம்பித்தல் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** ஆனது முகப்புத்தகக் கணக்கின் புகைப்படமாக நண்பியின் புகைப்படத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட போலியான முகப்புத்தகக் கணக்கினால் ஏற்படும் பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய சிறந்த தொடர் நடவடிக்கைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. சமூக ஊடகம் பற்றிய அறிவைக் கொண்டிருந்த சில பரீட்சார்த்திகள் முகப்புத்தக நிறுவனத்திடம் தெரிவித்தல் போன்ற சரியான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் வேறு சிலருக்கோ இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற எவ்வித யோசனைகளும் காணப்பட வில்லை. இதனால், அவர்களால் சரியான விடை அளிக்க முடியாதிருந்ததுடன் இப்பகுதிக்கான புள்ளியையும் பெற இயலவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06**

இவ்வினா **(a), (b)** என 2 பிரதான பகுதிகளைக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர்.

**பகுதி (a)** இல், பசுமைக் கணினியியல் நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கான 3 காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் கணினிகளின் சூழல் நேயப் பாவனை பற்றியோ அவ்வாறு பாவிப்பதற்கான காரணங்கள் பற்றியோ எவ்வித தெளிவான விளக்கங்களும் காணப்படவில்லை. இதனால், அவர்களால் இவ்வினாவுக்குச் சரியாக விடையளிக்க முடியாதிருந்ததுடன் மிகக் குறைவான புள்ளிகளையே பெற முடிந்தது.

**பகுதி (b)** இல், பொருட்களின் இணைய சாதனங்களால் ஆற்றப்படும் தொழிற்பாட்டை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இது தகவல் தொழினுட்பத்துடன் தொடர்புடைய மிகவும் நவீன எண்ணக்கருவாக இருந்தபடியால், அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியானவாறு விடையளிக்க இயலவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவுமில்லை. ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே பொருட்களின் இணையம் என்ற எண்ணக்கருவைச் சரியாக இனங்கண்டு, உகந்தவாறு விடையளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 07**

இந்த வினா, தரப்பட்ட விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட மொத்தம் 25 புள்ளிகளுக்காக 5 உப வினாக்களை உள்ளடக்கியிருந்தது.

**பகுதி (a)** ஆனது, விற்பனைப் படையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு LBL பின்பற்றக்கூடிய சாத்தியமான IT தந்திரோபாயத்தை ஆராயுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதைச் சரியாக இனங்காணவில்லை. இதனால், அவர்களால் நன்றாக விடையளிக்க முடியாமல் இருந்ததுடன் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**பகுதி (b)** ஆனது, மேலே **பகுதி (a)** இல் குறிப்பிடப்பட்ட தந்திரோபாயத்தை அடைந்து கொள்வதற்கு கம்பனி முதலீடு செய்ய வேண்டிய IT உட்கட்டமைப்பின் பகுதிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. **பகுதி (a)** இற்கு வெற்றிகரமாக விடையளிக்காததன் காரணமாக அதிகளவான பரீட்சார்த்திகளால் **பகுதி (b)** இற்கும் சரியான விடையினை அளிக்க முடியவில்லை. எவ்வாறாயினும், வேறு சில பரீட்சார்த்திகள் வணிக நுண்ணறிவு, இணையத் தளங்கள், தரவு முகாமைத்துவம், சேமிப்பகம் போன்றவை பற்றிச் சரியாகக் குறிப்பிட்டிருந்ததுடன் மிகச் சிறந்த புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** ஆனது, வணிகத்திற்கான வணிக நுண்ணறிவைப் பயன்படுத்தி LBL பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் ஆகக்குறைந்தது 2 சரியான நன்மைகளைக் குறிப்பிட்டு, புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**பகுதி (d)** ஆனது, LBL இற்கு செயற்பாடுமிக்க சமூக ஊடகமொன்றின் பிரசன்னத்தை பேணுவதால் ஏற்படக்கூடிய அனுகூலங்களைப் பட்டியலிடுமாறு கேட்டிருந்தது. வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை மிகவும் திருப்திகரமானது. அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடையளித்து, ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது. அவர்கள் சமூக ஊடகம் தொடர்பில் தாங்கள் கொண்டிருந்த பொது அறிவைப் பயன்படுத்தி நன்றாக விடையளித்திருந்தனர்.

**பகுதி (e)** ஆனது, ‘‘பெருந் தரவு’’, ‘‘தரவு காட்சிப்படுத்தல்’’ ஆகிய எண்ணக்கருக்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் இத்தகைய எண்ணக்கருக்கள் பற்றிய எவ்வித யோசனைகளும் இல்லை என்பதை அவர்கள் அளித்த விடைகளிலிருந்து அறிய முடிந்தது. சிலர் அத்தகைய பதங்களைப் பயன்படுத்தி விபரிப்புச் செய்வதற்கு முயற்சித்திருந்த போதிலும், அவர்களால் எவ்வித புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்:</u>

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.

2. பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற / சம்பந்தமற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.

4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.

5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு சரியாக இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

7. உமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காக கடந்தகால வினாத்தாள்கள்/முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைகளைப் படிக்கவும்.

8. நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்த பயிற்சி செய்யவும்.

9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.

10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையை எழுதவும்.

- * * * -